**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 522/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஸ்ரீதர் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்வம் | தொழில் | : | தனியார் வேலை |
| கிராமம் | : | மீனாட்சிபுரம் | வயது | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 9th, 2026.

**(3ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் மீனாட்சிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கேபிள் ஒயர் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். நாங்கள் ஊர் விட்டு ஊர் வந்து கேபிள் ஒயர் வேலை அந்தந்த இடத்தில் தங்கி செய்வோம். தொழில் போட்டி காரணமாக எதிரிகளுக்கும், எங்களுடைய ஓனர் முருகானந்ததிற்கும் பிரச்சனை இருந்தது. 09.12.2020 அன்று மதியம் 03.00 மணியளவில் இராயகிரி ரோட்டில் நாங்கள் கேபிள் வேலை பார்த்து கொண்டிருந்தோம்.

அப்போது, எதிரிகள் 3 பேரும் 2 வண்டிகளில் வந்தார்கள். வெள்ளப்பாண்டி என்னுடைய முதுகில் கையால் அடித்து முள்ளில் தூக்கி போட்டார். என்னை காப்பாற்ற சரவணன் வந்தார், சரவணனையும் வெள்ளப்பாண்டி அடித்து கீழே தள்ளி விட்டார். நாங்கள் வேலை பார்த்து கொண்டிருந்த ஒயர்களை வெள்ளப்பாண்டியும், கருப்பசாமியும் அரிவாள் வைத்து வெட்டி சேதப்படுத்தினார்கள்.

வெள்ளப்பாண்டி பைக் டேங் பையில் இருந்து அரிவாளை எடுத்து எங்களை வெட்ட வந்தார். நாங்கள் உயிர் பயத்தில் கத்தினோம். அப்போது ரோட்டில் பாண்டியன், மகேந்திரன் ஆகியோர்கள் வந்தார்கள். அதனால் எதிரிகள் எங்களை விட்டு விட்டு சென்று விட்டார்கள். எதிரிகள் வெட்டி சேதப்படுத்திய ஒயர் ரூ.10,000/— மதிப்பு பெறும். நானும், சரவணனும் பின்னர் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம். அங்கு வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகாரை நான் கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் போய் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நானும், சரவணனும் சம்பவயிடத்தில் வேலை பார்த்து கொண்டிருந்தோம். முருகானந்தத்திற்கு நான் தான் தகவல் சொன்னேன். எதிரிகள் இருக்கும் போதே முருகானந்தம் வந்தாரா? என்றால் இல்லை. புகாரை நான் கைப்பட எழுதினேன் என்றால் சரிதான். புகாரை நான் காவல்நிலையத்தில் கொடுத்த போது என்னுடன் யார், யார் வந்தார்கள் என்றால் சரவணனும், முருகானந்தமும் வந்தார்கள். அவர்கள் புகாரில் கையெழுத்து செய்யவில்லை.

சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு இருசக்கரவாகனத்தில் சென்றோம். நானும், சரவணனும், முருகானந்தமும், கோட்டைராஜீம் மருத்துவமனைக்கு சென்றோமா? என்றால் 4 பேரும் சென்றோம். மருத்துவர் காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று விசாரித்தபோது, முருகானந்தம் அங்கு இருந்தார் என்றால் சரிதான். மருத்துவரிடம் எதிரிகளின் பெயர்களை சொல்லவில்லை. புகாரில் எதிரிகளின் பெயரை

சொல்லியுள்ளேன். புகாரில் எத்தனை மணிக்கு நான் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி வெள்ளப்பாண்டி வேலை செய்து வரும் கேபிள் உரிமையாளர் சுப்பையாவுக்கும், முருகானந்ததிற்கும் தொழில் போட்டி இருந்தது என்றால் சரிதான். இது சம்பந்தமாக முருகானந்தம் பெயரில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் மாலை 04.00 மணியளவில் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் மருத்துவமனை சென்று விட்டு காவல்நிலையம் சென்றேன் என்றால் மறுநாள் தான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். எனக்கு ஏற்பட்ட காயம் கேபிள் டீவி ஒயர் மாற்றும் போது ஏற்பட்டது என்றால் சரியல்ல.

என்னுடைய ஓனர் முருகானந்திற்கும், எதிரிகளுக்கும் ஏற்பட்ட தொழில் போட்டி காரணமாக முருகானந்தம் தான் அந்த ஒயரை வெட்டி விட்டு என்னை வைத்து பொய் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதனால் தான் மருத்துவரிடம் அடையாளம் தெரியாத நபர்கள் என்னை தாக்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. புகார் மனு பின்யோசனையின் காரணமாக காலதாமதத்துடன் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.02.09 18:19:39 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 522/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கிருஷ்ணன் | தொழில் | : | தனியார் வேலை |
| கிராமம் | : | மதுரை | வயது | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 9th, 2026.

**(3ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது கடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.2 ஸ்ரீதர் என்னுடன் கேபிள் வேலை பார்த்து வந்தார். எதிரிகளை எனக்கு தெரியும். 09.12.2020 ம் தேதி, மதியம் 03.00 மணியளவில் நானும், ஸ்ரீதரும் கரிவலம்வந்தநல்லூர் – இராயகிரி ரோட்டில் கேபிள் வேலை பார்த்துக்கொண்டிருந்தோம். ஸ்ரீதர் ஒயரை எடுத்து சுற்றி கொண்டிருந்தார். நான் ஒயரை கட்ட வேண்டி போஸ்டில் ஏறி நின்று கொண்டிருந்தேன். வெள்ளப்பாண்டி இருசக்கரவாகனத்தில் ஸ்ரீதர் மீது மோதுவது போல் வந்தார். ஸ்ரீதரை வெள்ளப்பாண்டி கையால் அடித்து முள்ளில் தள்ளினார்.

ஸ்ரீதருக்கு காலிலும், முதுகிலும் காயம் ஏற்பட்டது. நான் போஸ்டிலிருந்து கீழே இறங்கி வந்தேன். எதிரிகள் உதயகுமாரும், கருப்பசாமியும் இன்னொரு வண்டியில் வந்தார்கள். நான் போய் தடுத்தேன். உதயகுமாரும், கருப்பசாமியும் என்னையும் கையால் அடித்து கீழே

தள்ளினார்கள். எதிரிகள் அசிங்கமாக பேசினார்கள். எதிரிகள் ஒரு கம்பெனி நிறுவனத்தில் வேலை பார்க்கிறார்கள். நாங்கள் முருகானந்தம் என்பவரிடம் கேபிள் வேலை பார்க்கிறோம். இரண்டு நிறவனத்திற்கும் தொழில் போட்டி இருந்தது. எதிரிகள் தொழில் போட்டி காரணமாகத் தான் அந்த இடத்தில் நாங்கள் கேபிள் ஒயர் போடுவதினால் பிரச்சனை செய்தார்கள். எதிரி வெள்ளப்பாண்டி அவருடைய வண்டிலிருந்து அரிவாளை எடுத்து வந்து எங்களை வெட்ட வந்தார். நாங்கள் விலகிச் சென்றோம்.

அரிவாள் வைத்து ஒயர்களை வெட்டி ரூ.10000/—ற்கு சேதம் ஏற்படுத்தினார். எங்களையும் வெட்டி விடுவேன் என்று மிரட்டினார். எதிரி கருப்பசாமி இங்கிருந்து சென்று விடுங்கள், இல்லையென்றால் உங்களை எதாவது செய்து விடுவோம் என்று சொன்னார். அங்கு இருந்த நபர்கள் வந்தார்கள். பின்னர் எங்களை தனியாக அனுப்பி விட்டார்கள்.

நான் கோட்டை என்பவருக்கு போன் செய்தேன். எனக்கு வெளிக்காயம் இல்லை. நானும், ஸ்ரீதரும் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம். அங்கு வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றோம். மறுநாள் காவல்நிலையம் சென்று, ஸ்ரீதர் எழுத்து மூலமாக புகார் கொடுத்தார். நானும், முருகானந்தமும் வாய்மொழியாகச் சொன்னோம். கோட்டைராஜீம் வந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

ஸ்ரீதர் அளித்த புகாரில் நானும் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் புகாரில் கையொப்பம் செய்தபோது முதல்விசாரணையில் சொன்னபோது உதயகுமாரும், கருப்பசாமியும் என்னை அடித்ததை ஆய்வாளர் விசாரணையில் கூறியுள்ளேன். சங்கரன்கோவில் அரசு

மருத்துவமனையில் எனக்கு சிகிச்சையளித்த மருத்துவர் என்னிடம் விசாரித்தார். அவரிடம் யார், யார் அடித்தார்கள் என்று சொன்னேன். ஆய்வளாரிடமும் இந்த விபரத்தை சொன்னேன். சம்பவயிடத்திலிருந்து முதலில் மருத்தவமனை சென்றோம். நாங்கள் இருசக்கரவாகனத்தில் சென்றோம். நானும், ஸ்ரீதரும், முருகானந்தமும், கோட்டையும் சென்றோம். முருகானந்தம் எங்களுக்கு சிகிச்சை அளித்த போது வெளியில் நின்றார். காவல்நிலையத்தில் ஸ்ரீதர் புகார் எழுதிக்கொடுத்தார். நான் அதில் அறிவேன் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

1 வது எதிரி வெள்ளப்பாண்டி வேலை செய்து வரும் கேபிள் உரிமையாளர் சுப்பையாவுக்கும், முருகானந்ததிற்கும் தொழில் போட்டி இருந்தது என்றால் சரியல்ல. சுப்பையா SCV என்ற கேபிள் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நாங்கள் DCL என்ற கேபிள் நடத்தி வருகிறோம். ஏற்கனவே சுப்பையா புகார் கொடுத்து, முருகானந்தம் பெயரில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

நான் ஒரு மணிநேரம் அரசு மருத்துவமனையில் இருந்தேன். பின்னர் அடுத்தநாள் காவல்நிலையம் சென்றோம். எனக்கு ஏற்பட்ட காயம் கேபிள் டீவி ஒயர் மாற்றும் போது ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய ஓனர் முருகானந்திற்கும், எதிரிகளுக்கும் ஏற்பட்ட தொழில் போட்டி காரணமாக முருகானந்தம் தான் அந்த ஒயரை வெட்டி விட்டு அ.சா.2 ஐ வைத்து பொய் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதனால் தான் அ.சா.2 மருத்துவரிடம் அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. புகார் மனு பின்யோசனையின் காரணமாக காலதாமதத்துடன் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.09 18:20:03 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 522/2024**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகானந்தம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | நடராஜன் | தொழில் | : | கேபிள்டிவி டிஸ்ரிபூயுட்டர் |
| கிராமம் | : | பாண்டியாபுரம் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 9th, 2026.

**(3ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் பாண்டியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது கேபிள்டிவி டிஸ்ரிபூயுட்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.2 ஸ்ரீதர், அ.சா.3 சரவணன் ஆகியோர்கள் என்னுடைய கேபிள் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார்கள். எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கும், வேறு கேபிள் நிறுவனங்களுக்கும் தொழில் போட்டி இருந்தது. தொடர்ந்த 15 நாட்கள் என்னுடைய கேபிள் டீவி ஒயர்கள் இரவு நேரத்தில் வெட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாளும் அதனை வேலை செய்து பராமரித்து வந்தோம்.

09.12.2020 அன்று மாலை 03.30 மணியளவில் ஸ்ரீதரை எதிரிகள் தாக்கியதாக எனக்கு சரவணன் போன் மூலம் தகவல் சொன்னார். நான் குவளைக்கண்ணி என்ற இடத்திற்கு சென்றேன். கரிவலம்வந்தநல்லூர் – இராயகிரி ரோட்டில் சென்று அ.சா.2, அ.சா.3 ஆகியோர்களை

அழைத்துக்கொண்டு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சென்றேன். கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்திற்கு போன் மூலமாக தகவல் சொன்னோம். மறுநாள் காலை ஸ்ரீதர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். நானும், சரவணனும் உடன் சென்றோம். பின்னர் சம்பவம் நடந்த பனையூர் விலக்கிற்கு என்னை போலீசார் அழைத்து சென்றார். பனையூர் விலக்கில் எதிரிகளால் வெட்டப்பட்டு கிடந்த ரூ.10000/– மதிப்புள்ள ஒயர்களை காவல்துறையினர் எடுத்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

15 நாட்கள் என்னுடைய ஒயர்கள் வெட்டுப்பட்டு இருந்த விபரத்தை நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் இது குறித்து எழுத்து மூலமான புகார் கொடுக்கவில்லை. நான் TCCL, BSNL, Rail Wire ஆகிய நிறுவனங்களில் Distributor ஆக இருக்கிறேன். SCV கேபிள் நிறுவனம் நடத்தும் சுப்பையா என்பவரை எனக்கு தெரியுமா? என்றால் சுப்பையா என்பவரை தெரியும். ஆனால் அவர் SCV கேபிள் நிறுவனம் நடத்தவில்லை. நான் SCV கேபிள் நிறுவன ஒயர்களை வெட்டியதாக என் மீது சுப்பையா புகார் கொடுத்து, அதன் மீது குருவிகுளம் காவல்நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடத்திற்கு நான் வரும்போது, சாயங்காலம் 04.30 முதல் 05.30 மணியிருக்கும். நாங்கள் அரசு மருத்துவமனைக்கு காரில் சென்றோம். நானும், கோட்டைராஜீம், சரவணனும், ஸ்ரீதரும் சென்றோம். அவர்களுக்கு சிகிச்சை நடந்த போது நான் வெளியில் நின்றேன். எதிரிகளை எனக்கு சம்பவ நேரத்திற்கு முன்பே எனக்கு தெரியுமா? என்றால் வெள்ளப்பாண்டி மட்டும் கேபிள் டீவி ஆபரேட்டர் என்று தெரியும்.

சம்பவநாள் அன்று எழுத்து மூலமான புகார் கொடுக்கவில்லை. ஸ்ரீதர் தான் புகாரை எழுதினார். அதில் நான் கையெழுத்து செய்யவில்லை. அ.சா.2 மற்றும் அ.சா.3 க்கு ஏற்பட்ட காயம் கேபிள் டீவி ஒயர் மாற்றும் போது ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிகளுக்கும் ஏற்பட்ட தொழில் போட்டி காரணமாக நான் தான் அந்த ஒயரை வெட்டி விட்டு அ.சா.2 ஐ வைத்து பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் அ.சா.2 மருத்துவரிடம் அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. புகார் மனு பின்யோசனையின் காரணமாக காலதாமதத்துடன் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.09 18:20:14 +0530